தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
விளம்பி, வைகாசி 21, திருவள்ளுவர் ஆண்டு 2049
2018 ஜூன் 4, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.”

செய்வதற்கு முடியாத கடினமான செயல்களையும் செய்யும் முறை அறிந்து, திறம்படச் செய்து முடிக்கின்ற திறமை உள்ளவரே பெருமை உடையவர் ஆவார்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

தார்ச் சாலை அமைத்தல்

***25702—திரு. கே.எஸ். விஜியகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி வட்டம், சூராவரி கண்டிகை முதல் மணலி கிராமம் வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்மிடிப்பூண்டி தொகுதியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள், தனது தொகுதியில் உள்ள சூராவரி கண்டிகை முதல் மணலி கிராமம் வரை தார்ச் சாலை அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி வட்டம், சூராவரி கண்டிகை மற்றும் மணலி ஆகிய இரண்டு கிராமங்களையும் தார்ச் சாலைமூலம் இணைக்க வேண்டி கேட்கப்பட்ட பகுதியானது, திருவள்ளூர் வனக் கோட்டம், கும்மிடிப்பூண்டி வனச் சரகத்திலுள்ள மணலி காப்புக் காடாகும். இந்த மணலி காப்புக் காட்டுப் பகுதியில் தார்ச் சாலை 1.53 கிலோ மீட்டர் நீளம் அமைப்பதற்கு அனுமதிக்கான பாதை உரிமம் (Right of way) *இல்லை. எனவே, வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன்படி, மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டுமென்பதால், சாலை அமைக்க விரும்பும் துறையானது, தக்க கருத்துருவை மத்திய அரசின் இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், அதற்கு உரிய அனுமதி பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள்.*

திரு. கே.எஸ். விஜியகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது தார்மீக மந்திரமாக, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று சொன்னார். அதுமட்டுமல்ல; தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்றும் தன்னுயிரை துச்சமென மதித்து, தன் உயிரையும் மாய்த்துக் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கக்கூடிய*

திசை நோக்கி வணங்குகிறேன். அதேபோன்று, ஸ்டெர்லைட் நாயகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, மணலி எருக்குவாய் ஊராட்சிக்கு செல்லும் சாலை, சூராவரி கண்டிகை முதல் எருக்குவாய் வரை செல்ல வேண்டும். சூராவரி கண்டிகையிலிருந்து மணலி காப்புக் காடு வரை உள்ள அந்தச் சாலையில் சுமார் 1.75 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கின்றது. அதன் பிறகு, சுமார் 1.53 கிலோ மீட்டர் சாலை மணலி காப்புக் காட்டில் வருகின்றது. மணலி காப்புக் காடு முடிந்தவுடன், சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மணலி கிராமம் இருக்கிறது. அதன்பிறகு, எருக்குவாய் உள்ளிட்ட கிராமங்களெல்லாம் இருக்கின்றன. அங்கு ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், மணலி காப்புக் காடு சாலை இன்றுவரை மண் சாலையாகவே இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்றால், அந்தச் சாலை வழியாகத்தான் பயணித்து கண்ணன்கோட்டைக்குச் செல்ல வேண்டும். அதைப்போல, அந்தப் பகுதியிலுள்ள மாணவ, மாணவிகள் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், அந்தச் சாலையைப் பயன்படுத்தி பூவளம்பேடுக்கு வர வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைப்போல, அந்தப் பகுதி மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்கு கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வரவேண்டுமென்றால், அந்தச் சாலையை நம்பியிருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அச்சாலையின் முக்கியத்துவத்தைக் கருதி, சொல்வதை மாத்திரமல்ல; சொல்லாததையும் செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அணுகி, மத்திய அரசிடம் அதற்கான அனுமதியைப் பெற்று, உடனடியாக அந்தச் சாலையை மேம்படுத்திட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் கேட்ட கேள்விக்கு முதலில் விளக்கமாகத்தான் பதில் சொல்லியிருக்கிறேன். அவர் மறுபடியும் அந்தக் கிலோ மீட்டர் கணக்கையெல்லாம் விரிவாகச் சொல்லியிருக்கிறார். நாங்கள் வன அலுவலகத்திலுள்ள கணக்குப்படி சொல்லியிருக்கிறோம். அவருடைய கோரிக்கைப்படி, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி, அந்தக் கருத்துருவுக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறவேண்டுமென்ற ஒரே விதி இருப்பதனால், அந்த விதியின் அடிப்படையில், அவர் கருத்துருவைக் கொடுத்தால், நிச்சயமாக விரைவான நடவடிக்கை எடுத்து, அதற்கு மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும், நிதித் துறை பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும் பேசி, நிதிகளைப் பெற்று அந்தச் செயலில் ஈடுபட முடியும், அது பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள்.*

திரு. கே.எஸ். விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஒரு சாலை மட்டுமல்ல; கும்மிடிப்பூண்டி தொகுதியில் அதுபோன்று சுமார் 20 சாலைகள், நம்முடைய வனத் துறை சார்ந்தது, பல்வேறு கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதுபோன்ற சாலைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கான அனைத்து அனுமதிகளையும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல, வனத் துறையைச் சார்ந்த Conservator of Forests *அவர்களை நான் தொடர்பு கொண்டு இதுகுறித்துப் பேசியபோது, 'நாங்கள் சாலை போடுவதற்கான அனுமதியைப் பெற்றாலும், அதைப் போடுவதற்கு எங்களிடம் நிதி கிடையாது' என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும், 'நம்முடைய உள்ளாட்சித் துறையிடமிருந்து அந்த நிதியை பெற்றுக் கொடுத்தீர்களென்றால்,*

நாங்கள் மத்திய அரசிடம் அதற்கான அனுமதியைப் பெற்று, அந்தச் சாலைகளை மேம்படுத்தித் தருகிறோம்' என்றும் அவர் சொல்லியிருக்கிறார். நம்முடைய உள்ளாட்சித் துறையிடமிருந்து மட்டுமல்ல; சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைக் கொடுப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் அனுமதி பெற்றுத் தாருங்கள். நாங்கள் இதுபோன்ற சாலைகளையெல்லாம் மேம்படுத்துவதற்கு நிதியை ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறோம். Conservator of Forests அவர்கள் சொன்னதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த நல்ல வேளையில் கொண்டு வர விரும்புகிறேன். அந்தச் சாலை முழுவதும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தால், நாம் நிதியைக் கொடுக்கப் போவது கிடையாது. ஆனால், ஒரு பகுதியில் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு வனத் துறைச் சாலை இருக்கின்றது. மீண்டும் ஒன்றியச் சாலைகள் சுமார் 20 சாலைகள் இருக்கின்றன. எனவே, அந்தச் சாலைகளையெல்லாம் மேம்படுத்திட ஏதுவாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய அனுமதி பெற்று, அதற்கான நிதியையும் ஒதுக்கி, வரும் நிதியாண்டிலே அதைச் செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள், Conservator of Forests அவர்கள் சொல்லியதாக சில கருத்துகளை இங்கே சொன்னார்கள். வனத் துறையைப் பொறுத்தவரையில், உரிய கருத்துருக்களைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும். Chief Conservator of Forests அவர்களுடைய கருத்தின் அடிப்படையில்தான் முதலிலே என்னுடைய பதிலை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கினால், இந்தப் பணி செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரிடம் கலந்து பேசி, விதிகளில் இடமிருந்தால் அந்த நிதியைப் பயன்படுத்திக் கொள்வதற்கு எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களது நிதியை அதுபோன்று ஒதுக்கீடு செய்வதற்கு உரிய சூழ்நிலை உருவானால், இந்தக்

கேள்விகள் இனிமேல் சட்டசபையிலே எழாத அளவிற்கு, சாலைகள் மற்றும் பிற பணிகள் எல்லாம் வனத் துறையின் மூலமாகச் செய்யப்படும். இருந்தாலும், ஏற்கெனவே சொன்ன அதே பதிலை மீண்டும் சொல்கிறேன். மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறுவதற்கு ஏதுவாக, உரிய கருத்துருவை நீங்கள் வனத் துறை அலுவலகத்தில் சமர்ப்பித்தால், விரைவிலே அதற்குரிய அனுமதியைப் பெற்று, நிதியை ஒதுக்கீடு செய்ய, நாம் அத்தனைபேரும் சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி அதனைப் பெற்று இப்பணிகளை மேற்கொள்ள பரிசீலனை செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட வடகாடு ஊராட்சி என்பது மலைப் பகுதியில் அமைந்திருக்கிறது. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த வடகாடு ஊராட்சியில் பெத்தேல்புரத்திலிருந்து சிறுகாட்டுக் கோம்பைக்கு, 2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், சுமார் 6 கிலோ மீட்டருக்கு தார்ச் சாலை வனத் துறையின் சார்பாகப் போடப்பட்டது. வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள,* Forest Engineering Wing*–ன் மூலமாக அந்தச் சாலை போடப்பட்டு, இன்றைக்கு 10, 12 ஆண்டுகளில் அந்தச் சாலை பழுதடைந்துவிட்டது. எனவே, அந்தச் சாலையை உடனடியாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சீர் செய்வதற்கு நிதியை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அங்கே மலை ஜாதியினர் சுமார் 1,000 பேர் வசிக்கிறார்கள். 2 ஆண்டுகளுக்கு முன்பாக சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 100 சோலார் விளக்குகள் கொடுத்தேன். இப்போது, இந்த ஆண்டும் 100 விளக்குகள் கொடுத்திருக்கின்றேன். எனினும், அவர்கள் மின்சார வசதி இல்லாமல் இருக்கிறார்கள். கிணறு அங்கே வெட்டப்பட்டிருந்தாலும்,* oil engine *மூலமாகத்தான் அங்கே, அந்த மக்கள் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, அங்கு அந்த மக்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தருவதற்கும், தார்ச் சாலையைப் போட்டுத் தருவதற்கும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், ஏற்கெனவே இந்தக் கேள்வியை இந்த மாமன்றத்தில் எழுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய கருத்துகளை ஏற்கெனவே இங்கே பதிலாகச் சொல்லியிருக்கிறேன். ஆனாலும், அவர்கள் விளக்குகளெல்லாம் போட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள் சொல்லியதைப்போல, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அவற்றிற்கு நிதி ஒதுக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், இதுபோன்ற பணிகளையும் செய்யலாம். திரு. சக்கரபாணி அவர்கள் சபையில் இல்லாத நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 22, 23 மலைப் பிரதேசங்கள் இருப்பதாகக் கணக்குக் கொடுத்து, அங்குள்ள மலைக் கிராமங்களில் போடப்பட வேண்டிய சாலைகளின் விவரங்கள், கட்டப்பட வேண்டிய கச்சா வீடுகள், மிருகங்களுக்கு தண்ணீர் வசதி குறித்த விவரங்களை எங்களுக்கு மொத்தமாகக் கொடுங்கள். அதற்குரிய நிதிகளை ஒதுக்குவதற்குரிய சூழ்நிலையை நான் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்று 4 தினங்களுக்கு முன்னால் இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்களுடைய கவனத்திற்கு அதை இப்போது கொண்டுவர விரும்புகிறேன். அந்த நேரத்தில் அவர், 'ஒரு நாள் சபாநாயகராக' வெளியில் இருந்ததாகச் செய்தியைப் பார்த்தேன். (சிரிப்பு) அவர் சபாநாயகராக இருந்து, நல்ல தீர்ப்பைத் தர வேண்டும். நிதியில்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. இருந்தாலும், அந்தப் பணிகளைச் செய்வதற்குரிய சூழ்நிலையை நான் உருவாக்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சபாநாயகர் வேலை எவ்வளவு கஷ்டம் என்பது இப்போது அவருக்குத் தெரிந்திருக்கும். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத்*

[2018 ஜூன் 4

தொகுதிக்குட்பட்ட பூச்சிக்காடு என்ற ஊரிலிருந்து, வனப் பகுதியில் உள்ள நாலுமாவடி வரை, அன்றைக்கு எங்களுடைய தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் சாலைகளை அமைத்தார்கள். அப்போது கூட்டுறவுத் துறை அமைச்சராக மரியாதைக்குரிய ஐயா சி.பா. ஆதித்தனார் அவர்கள் இருந்தார்கள். முன்பு 15 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டிய அந்த நிலைமையை மாற்றி, குறுக்கே வனப் பகுதியில் சாலைகளை அமைப்பதற்கான திட்டங்களைத் தீட்டி, சாலைகளை அமைத்தார்கள். இன்றைக்கு அந்தச் சாலைகள், ஏறக்குறைய பாதி இடங்களில் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்தச் சாலைகளைச் செப்பனிட நடவடிக்கை எடுத்தால், உடனடியாக வனத் துறை அதிகாரிகள் அதைப் போட முடியாது என்று இன்றைக்கு அதைத் தடுத்து வருகின்றார்கள். அதுமட்டுமல்ல; அங்கு அருஞ்சுனை காத்த ஐயனார் என்ற ஒரு கோயில் இருக்கின்றது. அந்தக் கோயிலுக்குச் செல்வதற்காக, அங்கே கல் சாலை போட்டிருக்கிறார்கள். பொது மக்களின் நலன் கருதி, தார்ச் சாலை போட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஆனால், வனத் துறையினர் அதை ஒட்டுமொத்தமாகத் தடுக்கின்றார்கள். அருஞ்சுனை காத்த ஐயனார் கோயிலில் நடைபெறும் திருவிழாவிற்கும் பொது மக்கள் வருகின்றார்கள்; தினந்தோறும் மக்கள் வந்து போகின்ற இடம். அதுமட்டுமல்ல; திருவிழா நாட்களில் ஏறக்குறைய 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் பொது மக்கள் ஒட்டுமொத்தமாகக் கூடுகின்ற இடம். எனவே, அந்த இடத்தில் சாலையைப் போடுவதற்கும், ஏற்கெனவே பூச்சிக்காடிலிருந்து நாலுமாவடி வரை போடப்பட்டு, தற்போது பழுதடைந்திருக்கின்ற அந்தச் சாலையைச் சரி செய்வதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள், நம்முடைய ஆதித்தனார் ஐயா காலத்தில் அங்கே சாலை போடப்பட்டதாக, வரலாற்றைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய குறிப்புகளை என்னிடம் கொடுத்தால், துறையின் மூலமாக அதை விசாரித்து, முடியும் என்று

சொன்னால், அதைச் செய்து தருவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

நீர் மின் திட்டம்

***5554—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் நீர் மின் திட்டம் துவக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *கொல்லிமலையில் 1 X 20 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்கான ஆணை வழங்கப்பட்டு, இடம் கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடிய விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்கின்ற தாரக மந்திரத்தோடு, அமைதி, வளம், வளர்ச்சி என்ற நிலையில், தமிழக மக்களுக்காக 24 மணி நேரத்தில், 18 மணி நேரம் அல்லும் பகலும் அயராது உழைத்து, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில்*